
# திராவிடத்தால் வாழ்கிறோம்

943

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

26

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# நினைவில் நிற்கும் மொய்தீன் பிச்சை!

1957-ஆம் ஆண்டு, ஒன்றிய அரசின் இந்தி திணிப்புக்கு எதிராக 'அரசியல் சட்ட நகல் எரிப்பு' போராட்டத்தை பெரியார் அறிவித்தபோது, "தமிழ்நாட்டில் சிலர் நாடு கடத்தப்பட வேண்டியவர்கள், முட்டாள்தனமாக நடந்துகொள்கிறார்கள்" என்று விமர்சித்தார் அன்றைய பிரதமர் நேரு. அதற்காக நேருவுக்குக் கடும் கண்டனம் தெரிவித்த தி.மு.கழகம், 06.01.1958 அன்று சென்னைக்கு வரும் நேருவுக்கு கருப்புக்கொடி காட்டுவது என்று, 29.12.1957-இல் நாகர்கோவிலில் நடைபெற்ற பொதுக்குழுவில் முடிவு செய்தது.

தி.மு.க.வின் போராட்டத்தை முடக்க வேண்டுமெனில், கூட்டம் கூடவோ, பேசவோ கூடாது என தடைசெய்தால்தான் முடியும் என்பதால், அன்றைய ஆட்சியாளர்கள் தி.மு.க. கூட்டம்கூட தடை விதித்தனர். சென்னை கடற்கரையில், பேரறிஞர் அண்ணா கலந்துகொள்ளும் கூட்டம் அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கும் தடை விதித்தனர். ஆனால், தடையை மீறி பேசத் தீர்மானித்த அண்ணா, அறிவகத்தில் இருந்து ஏ.வி.பி. ஆசைத்தம்பி, ஈ.வெ.கி.சம்பத், இரா.செழியன் ஆகியோருடன் புறப்பட்டு, கடற்கரைக்குச் செல்லும் வழியில் கைது செய்யப்பட்டார். பின்னால் காரில் வந்த கலைஞர், தர்மலிங்கம், அரங்கண்ணல் உள்ளிட்டோரும் கைது செய்யப்பட்டனர். கார் ஓட்டுநர் ரங்கசாமியையும் காவல்துறை விட்டுவைக்காமல் கைது செய்தது. காரும் பறிமுதல் செய்யப்பட்டது. அறிவகத்தையும் காவல்துறை சூழ்ந்து கொண்டது.

## 144 தடையும் – கடற்கரைக் கூட்டமும்

அண்ணா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடெங்கும் உடனடியாக, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொடர்ந்து நான்கு நாட்கள் பல தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

நேரு சென்னை வரும் நாளும் வந்தது. ஆறாம் தேதி காலை நேருவின் விமானம் சென்னையில் தரையிறங்கும் முன்பே, கழக உடன்பிறப்புகள் 20,000 பேர் அடக்குமுறைகளை மீறி குவிந்துவிட்டனர். 'நாவடக்கமில்லா நேருவே... திரும்பிப் போ' என்ற முழக்கங்களைக் கடந்தே நேரு வெளியேறினார்.

அண்ணா சாலை வழியாக ஊர்வலமாக செல்லத் திட்டமிட்டிருந்த நேரு, பாதையை மாற்றி கடற்கரைச் சாலை வழியாக விருந்தினர் மாளிகையை அடைந்தார். கண்ணீர் புகைக்குண்டு வீச்சு, துப்பாக்கிச்சூடு, தடியடி என தி.மு.கழகத்தினர் மீது கொடூரத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது காவல்துறை. ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த அடக்குமுறையில் இருவரைப் பலி கொடுத்தது தி.மு.கழகம். ஒருவர் மொய்தீன் பிச்சை, மற்றொருவர் கோவிந்த ராவ். மொய்தீன் பிச்சைக்கு அப்போது வயது 40.

அந்த வரலாற்றினை திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு எழுதிய தி.மு.க.வரலாறு 3-ஆம் பாகத்தில் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

மொய்தீன் பிச்சை, திருவல்லிக்கேணி 42-வது வட்டம் (நிகழ்ச்சி நடந்தபோது 42-வது வட்டம்) கழக உறுப்பினர்.

திருவல்லிக்கேணி தி.மு.க. துணை மன்றமான இளைஞர் முன்னேற்ற மன்றத்தில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தவர். அந்த வட்டாரத்தில் நன்கு அறிமுகமான தோழர் மரணமடைந்து விட்டார் என்றதும், தென்சென்னையே பெரும் பரபரப்பாகிறது.

ஜனவரி 8-ஆம் தேதி மாலையிலிருந்து பெரும்பாலான கழகத் தலைவர்களும், முன்னணி வீரர்களும், கழகத் தோழர்களும் விடுதலை செய்யப்பட்டனர். மொய்தீன் பிச்சை, திருவல்லிக்கேணி ஆறுமுக ஆச்சாரி தெருவில் 25-ஆம் எண்ணுள்ள இல்லத்தில் குடியிருந்தார்.

அவர் மரணம் அடைந்ததன் காரணமாக கழகத் தோழர்களும், பொதுமக்களும் எண்ணற்றவர்கள் அங்கே கூடியிருந்தனர். சிறையிலிருந்து அப்போதுதான் மீண்ட பொதுச்செயலாளர் நாவலர் மற்றும் இதர முன்னணி வீரர்களும் தகவல் கிடைத்ததும், உடனே, மொய்தீன் பிச்சையின் இல்லத்திற்கு விரைந்தனர். அங்கு, பொதுச்செயலாளர் நாவலர், துணைப் பொதுச்செயலாளர் என்.வி.நடராசன், கலைஞர், கே.ஏ.மதியழகன் முதலியோர் தோழர் மொய்தீன் பிச்சை அவர்களின் சடலத்திற்கு மாலை சூட்டி, தங்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர்.

மொய்தீன் பிச்சை அவர்களின் இறுதி ஊர்வலத்தில் தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். கிருஷ்ணாம்பேட்டையில் உள்ள முஸ்லிம் சவ அடக்க மைதானத்திற்குத் திருவல்லிக்கேணி பெருஞ்சாலை வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது பொதுச் செயலாளர் நாவலர், என்.வி.என், கலைஞர் உள்பட ஆயிரக்கணக்கான தோழர்களும், பொதுமக்களும் அணிவகுத்து சென்றனர்.

சவ அடக்க மைதானத்திலும், வழி நெடுகிலும் கணக்கற்ற போலீசார் இரும்புத் தொப்பிகளுடனும், துப்பாக்கிகளுடனும், நின்று கொண்டிருந்தனர். சம்பிரதாயப்படி சவ அடக்கம் நடந்து முடிந்ததும் இளைஞர் முன்னேற்ற மன்றச் செயலாளர் ஷாகுல், மொய்தீன் பிச்சையின் வீரமரணம் பற்றிக் குறிப்பிட்டு, அவருக்கு இறுதி வணக்கம் செலுத்த நாவலரை அழைத்தார்.

## கழகம் கைவிடாது

"நாம் இங்கே நமது கழகத்தின் தீவிர உறுப்பினர் ஒருவரை இழந்து விட்டு கூடியிருக்கிறோம். நிகழ்ச்சி முடிந்ததும் ஆறாத்துயருடன், துக்க உணர்ச்சியுடன் அமைதியாக 'கலைந்து வீடு செல்ல வேண்டும்' என்று நாவலர் கேட்டுக்கொண்டதுடன், "மொய்தீன் மறைவினால் நாம் கண்ணீர் வடிக்கிறோம் என்றாலும், அவரது மறைவால் ஆதரவற்றுத் தவிக்கும் அவரது குடும்பத்தாரின் கண்ணீரைத் துடைக்க வேண்டியது நமது கடமை. அவர்களது துயர் போக்க, நாம் எல்லோரும் முயற்சிப்போம் என்ற உறுதி மொழியை அவர்களுக்குத் தந்தாக வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். இறுதியாக தலைமை நிலையத்தின் சார்பில், மொய்தீன் சடலத்தின் மீது மலர்மாலை சூட்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்டார்.



> சென்னை மாவட்ட 3-வது மாநாட்டு அரங்கத்துக்கு மொய்தீன் பிச்சை பெயர்தான் வைக்கப்பட்டது.

திருச்சி மாவட்டத்தின் சார்பில், அன்பில் தர்மலிங்கம், சென்னை மாவட்டத்தின் சார்பில் அலமேலு அப்பாதுரை, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, திருவல்லிக்கேணி கிளைக் கழகம் சார்பில் நீலநாராயணன் மற்றும் பல மன்றங்களின் சார்பில் பலரும், தங்களின் இறுதி வணக்கத்தைத் தெரிவிக்கும் வகையில் மலர் மாலைகள் அணிவித்தனர்.

மொய்தீன் பிச்சை அவர்களின் நினைவினை கழகம் ஏந்தி நின்றதை அதற்குப் பின்னர் பல நிகழ்ச்சிகளில் காண முடிந்தது.

1958-ஆம் ஆண்டு, மார்ச் 8 ஆம் தேதி மதுரை மாவட்ட மாநாடு பழனியில் நடைபெற்றது. எம்.ஜி.ஆர் திறந்து வைத்த அந்த மாநாட்டு அரங்கத்துக்கு மொய்தீன்பிச்சை பெயர்சூட்டப்பட்டது. 1959-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதுக்கோட்டையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழு செயற்குழு கூட்டங்களில் 'கருப்புக்கொடி காட்டிய நாளில் அரசியலாரின் அடாத அடக்குமுறைக்கு ஆளாகி, இரங்கத்தக்க நிலையில் மாண்ட தோழர்கள் மொய்தீன் பிச்சை, கோவிந்தராவ் ஆகியவர்களுக்கும்' அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே ஆண்டில், அக்டோபர் 17 ஆம் தேதியும், 18 ஆம் தேதியும் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ திடலில் நடைபெற்ற சென்னை மாவட்ட 3-வது மாநாட்டு அரங்கத்துக்கு மொய்தீன் பிச்சை பெயர்தான் வைக்கப்பட்டது. 1961-ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற கழக மூன்றாவது மாநாட்டுத் தீர்மானத்தில் மொய்தீன் பிச்சை இறப்புக்கு அனுதாபம் தெரிவித்ததுடன், பேரறிஞர் அண்ணா தனது உரையிலும் மொய்தீன் பிச்சை பற்றிக் குறிப்பிட்டார்.

...நீளும்

## சாதி மறுப்புத் திருமணங்களும் கம்யூனிஸ்டுகளும்...

மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகங்களில், சாதி மறுப்புத் திருமணங்களைச் செய்யலாம் என அந்தக் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சண்முகம் அறிவித்திருப்பது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இது தொடர்பாக, 'தீக்கதிர்' நாளிதழில் முன்னாள் ஆசிரியர் சு.பொ.அகத்தியலிங்கம் தனது அனுபவ குறிப்பினைப் பகிர்ந்துள்ளது கவனிக்க வைக்கிறது.

சாதி மறுப்புத் திருமணங்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் ஆன உறவு இன்று நேற்று உருவானதல்ல; கட்சி தொடங்கிய காலம்தொட்டு, அது கம்யூனிஸ்ட் கட்சியில் இயல்பானதாக இருந்து வந்த ஒன்றே.

எதிர்ப்பவர்கள் யார் என்பதை விளக்கத் தேவை இல்லை. ஆனால், ஆதரிப்போர் சிலர் சி.பி.எம். இப்போதுதான் சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதாக பதிவு போடுகின்றனர். இந்த நட்பு முரண்பாட்டிற்கு விளக்கம்தான் இந்தப் பதிவு.

தோழர் கே.டி.கே.தங்கமணி, ஆர்.நல்லகண்ணு, உமாநாத், என்.சங்கரய்யா, பி.ராமமூர்த்தி, மைதிலி சிவராமன், உ.ரா.வரதராசன், வாசுகி, பாலகிருஷ்ணன், ப,சண்முகம் என காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் பட்டியல் போடத் துவங்கினால், பல நூறு பக்கங்கள் தேவைப்படும். 'தோழர்' என்.சங்கரய்யா ஒவ்வொரு மேடையிலும் காதல் திருமணங்களுக்கு பகிரங்கமாக ஊக்கம் தருவார். நான் வாலிபர் சங்கத்தில் பணியாற்றியபோதே காதல் மணங்களை ஊக்குவித்துள்ளேன்.

தற்போது ஆணவப் படுகொலைகள் நடந்துவரும் சூழலில், தோழர் சண்முகம் சாதி மறுப்புக் காதல் திருமணங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் பேசியது, எம் வரலாற்றில் தொடர்ச்சியே புதிதல்ல எனப் பதிவு செய்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### தளபதி பெரியப்பா அவர்கள் வைத்த பெயர்!



கு.பா.பிரியா நிதி

2000-ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம், துலுக்கப்பட்டிக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும், இன்றைய முதலமைச்சருமான தளபதி பெரியப்பா அவர்கள் வந்தபோது, விருதுநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த என் தந்தை மறைந்த கு.பாலசுப்பிரமணியன் அவர்களும் எனது தாயாரும் எனக்கு பெயர் சூட்டுவதற்காக தூக்கி சென்றிருந்தனர். பெரியப்பா தளபதி அவர்கள் எனக்கு 'கருணாநிதி' என்று பெயர் வைத்தார். பிறகு எனது தந்தையும், தாயும், தலைவர் பெயரை அழைக்கத் தயங்கி, எனக்கு பிரியாநிதி என்று பெயர் வைத்தனர். தளபதி அவர்களை, 'பெரியப்பா' என்று சொல்லியே வளர்த்தனர் எனது பெற்றோர். 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் புகைப்படத்தை பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது.

– **கு.பா.பிரியா நிதி, ராஜபாளையம், விருதுநகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### முதல் முழக்கமும், டெல்லி ஆர்வமும்!

1957-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 20ஆம் தேதி நாடாளுமன்றத்தில் உள்துறை மானியக் கோரிக்கையின் மீது, கழகத்தின் உறுப்பினர் சம்பத் பேசினார். மாநில அரசு ஊழியர்களின் நிலை, அந்தமான் நிக்கோபார் மக்களின் அவதி, இலங்கை பிரச்சினை, இந்தித் திணிப்பு ஆகியவற்றைப் பற்றி விரிவாகப் பேசினார். 'புதிய கட்சி, 10 ஆண்டுகளுக்குள் வளர்ந்துள்ள கட்சி, அதன் சார்பில், இரண்டு பேர் வந்துள்ளனரே, என்ன சொல்லப் போகின்றனர் என்கிற ஆர்வம், ஆசை பாராளுமன்றத்திற்கு ஏற்பட்டதாக 'டெல்லி மெயில்' நிருபர் எழுதியிருந்தார்' என 'திராவிட நாடு' பதிவு செய்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.